# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-93** **தேதி:21.09.2011**

## அக்டோபர் 10-ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்

## கூட்டு நடவடிக்கைக் குழு முடிவு

அன்பார்ந்த தோழர்களே!

21.09.2011 அன்று நடைபெற்ற கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் விருப்ப ஓய்வு திட்டம் கூடாது, போனஸ்(PLI) வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து போராடிட ஏக மனதாக முடிவு செய்துள்ளது. மாவட்ட/ மாநில/ அகில இந்திய மட்டங்களில் 27.09.2011 அன்று பெருந்திரள் உண்ணாவிரதமும், அக்டோபர் 10ஆம் தேதி அடையாள வேலை நிறுத்தமும் நடத்திட முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில், 27.09.2011 முதல் நடைபெற இருந்த மூன்று நாட்கள் உண்ணாவிரத போராட்டம் இதற்கேற்ற வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. SNEA சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஜோகி தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் BSNLEU, SNEA, AIBSNLEA, BSNL MS, TEPU, SEWA BSNL, BTU மற்றும் NFTBE ஆகிய சங்கங்கள் பங்கேற்றன.

### இயக்கங்கள்

**27.09.2011- மாவட்ட,மாநில,அகிலஇந்திய மட்டங்களில் பெருந்திரள் உண்ணாவிரதம்.**

**10.10.2011:- ஒரு நாள் வேலை நிறுத்தம்.**

### கோரிக்கைகள்

**01) VRS கூடாது.**

**02) போனஸ்(PLI) வழங்க வேண்டும்.**

**03) மருத்துவப் படி, LTC மற்றும் விடுமுறையை காசாக்குதல் ஆகியவற்றை மீண்டும் அமுலாக்க வேண்டும்.**

**04) கொள்கை தொடர்பான பிரச்சனைகள்.**

**05) 78.2% பஞ்சப்படி இணைப்பு.**

**கொள்கை தொடர்பான முடிவுகள் கீழ்கண்டவற்றையும் உள்ளடக்கியது:-**

அ) BSNLன் கிராமப்புற சேவைகளுக்கான இழப்பீடு.

ஆ) உண்மையான அடிப்படை ஊதியத்தில் ஓய்வூதிய கட்டணம்(Pension Contribution).

இ) BWA ஸ்பெக்ட்ரம் கட்டணமாக BSNL கட்டியுள்ள 8313கோடி ரூபாய்களை திரும்ப வழங்கு.

ஈ) லைசென்ஸ் கட்டணத்தை திரும்ப வழங்கு.

உ) கட்டுப்படியாகாத மாநிலங்களுக்கான 3G ஸ்பெக்ட்ரத்தை திருப்பித் தர BSNLக்கு அனுமதி வழங்கு. (தனியார் நிறுவனங்கள் அதன் விருப்பத்திற்கேற்ப தேவையான மாநிலங்களில் மட்டும் 3G ஸ்பெக்ட்ரம் வாங்க அனுமதிக்கப்பட்டுளன).

எ) "உத்தேசக் கடனுக்காக" BSNL நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட 7500 கோடி ரூபாய்களை வட்டியுடன் திருப்பித் தரவேண்டும்.

ஏ) கருவிகளை கொள்முதல் செய்வது.

ஐ) TAC முறையை ரத்து செய்வது.

இந்த போராட்டங்களில் கலந்துக் கொள்ள வேண்டும் என NFTE, FNTO சங்கங்களை அணுகுவது எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

எனவே உடனடியாக தலமட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டங்களை கூட்டி உண்ணாவிரதம் மற்றும் அடையாள வேலை நிறுத்தங்களுக்கான தயாரிப்பு பணிகளை உடனடியாக துவங்கிட வேண்டும்.

**பெற்ற உரிமைகள் பறிபோக அனுமதியோம்!**

**பெற்ற பணி பறிபோகவும் அனுமதியோம்!**

**பணியாற்றும் நிறுவனத்தை எப்பாடு பட்டேனும் காத்திடுவோம்.**

**ஒன்று பட்டு போராடுவோம்.....**

**அரசு மற்றும் நிர்வாகத்தின் சூழ்ச்சிகளை முறியடிபோம்.**

வாழ்த்துக்களுடன்,

தாழமையுள்ள,

S. Chellappa

**S. செல்லப்பா**
**மாநில செயலர்.**